## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.02.2018 ஆண்டவர் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா - திருப்பலி 02

04.02.2018 பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு - திருப்பலி 03

05.02.2018 புனித ஆகத்தா கன்னியர் - திருப்பலி 04

06.02.2018 புனித கொன்சாலோ கார்சியா மற்றும் புனித பால்மிக்கி-திருப்பலி 06

08.02.2018 புனித ஜோஸ்பின் பக்கித்தா - திருப்பலி 07

09.02.2018 அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் - திருப்பலி 08

11.02.2018 ஆண்டின் பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு - திருப்பலி 09

14.02.2018 விபூதி புதன் தவக்காலம் தொடக்கம் - திருப்பலி 11

18.02.2018 தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி 12

21.02.2018 தூய பீட்டர் தமியான் - திருப்பலி 14

22.02.2018 திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம் விழா - திருப்பலி 15

25.02.2018 தவக்காலம் இரண்டாம் ஞாயிறு - திருப்பலி 17


## பகுதி 2: விசுவாசத்தில் வளர...


தவக்காலம் ஏன்? எப்படி? 18

தவக்காலம் அருளின் காலம் 21

தூய பீட்டர் தமியானின் வாழ்வு தரும் பாடம் 25

திருச்சபை செய்திகள் 27

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 02.02.2018 ஆண்டவர் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. மலாக். 3:1-4 II. எபிரே. 2: 14-18 லூக். 2:22-40

இறையேசுவில் அன்புள்ள இறைமக்களே, இறைமகன் இயேசு நமக்காக மனிதனாகப் பிறந்து மரியா, சூசையப்பரால் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட விழாவை, நம் தாயாம் திருச்சபை இன்று கொண்டாடுகின்றது. யூத மக்கள் தங்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளை எருசலேம் தேவாலயத்தில் இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தல் சட்டமாக இருந்தது. இயேசு பிறந்த நாற்பதாவது நாள் மரியாவும் சூசையும் இயேசுவைத் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்றார்கள். இந்நிகழ்ச்சியில் நாம் அன்னையின் கீழ்ப்படிதலையும் தாழ்ச்சியையும் பார்க்கிறோம். அவர் விதிவிலக்குக் கோரவில்லை. அவர் தூய்மையே உருவானவர் என்றாலும் தூய்மைச் சடங்கிற்குத் தன்னை உட்படுத்துகிறார். சிமியோன் சில நிமிடங்கள் மட்டுமே குழந்தை இயேசுவைத் தன் கையில் ஏந்தி எல்லையற்ற மகிழ்ச்சியடைகிறார். நற்கருணை வாங்கும் ஒவ்வொரு முறையும் அதே பாக்கியம் நமக்கும் கிடைக்கிறது.

இன்று குழந்தை இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த திருவிழாவைச் சிறப்பிக்கும் நாம் முழு அர்ப்பண உணர்வோடு வாழ வரம் வேண்டுவோம். இறைவனுக்காக நம்மையே நாம் இழக்கும்போது நித்திய வாழ்வு பரிசாகக் கிடைக்கின்றது. பலனைப் பாராமல் பரமனின் கரங்களில் முழு அர்ப்பணமாவதே உண்மைக் காணிக்கை என்பதை உய்த்துணர்ந்து பக்தியோடு இன்றையத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அர்ப்பணத்தின் இலக்கணமே இறைவா, உமது ஆவியின் ஆற்றலால் வழிநடத்தப்படும் திருச்சபையை வழி நடத்திக் கொண்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர் துறவியர் வேதியர் பொதுநிலையினர் அனைவரையும் உமது ஆசியால் நிரப்பி, தூய ஆவியால் வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. குடும்பத்தின் தலைவரே இறைவா, குடும்பங்கள் உமது பிரசன்னத்தின் இருப்பிடம், துறவின் விளைநிலம். இளைஞர் இளம்பெண்கள் சோதனைகளிலும், தீயநெறிகளிலும், வீழ்ந்திடாமல் உலகக் கவர்ச்சிகளில் இருந்து விடுபட்டு அர்ப்பண வாழ்வைத் தேர்ந்தெடுக்கும் வரத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர், ஏனெனில் இறையாட்சி உங்களுக்குரியதே" (லூக். 6:20) என மொழிந்த இறைவா, எங்களுக்கு உமது ஞானவெளிச்சத்தைத் தந்து அதன் ஒளியால் நாங்கள் எங்கள் பாவங்களையும், பாவ நாட்டங்களையும் விலக்கி வாழ்ந்திட எங்கள் பலவீனங்களை பலங்களாக மாற்றிக்கொள்ள, எங்கள் கீழ்ப்படிதலால் உம்மை அன்பு செய்ய வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. "ஆண்டவர்மீது நம்பிக்கைக்கொண்டோர் பேறுபெற்றோர்" எனக்கூறிய இறைவா, செவிடரைக் கேட்க வைத்தீர். ஊமையரைப் பேச வைத்தீர். ஆனால் நாங்களோ எல்லாமிருந்தும் உம் அருள் வார்த்தையைக் கேட்காமல், உம் நற்செய்தியை அறிவிக்காமலும் உமக்கெதிராகப் பாவம் செய்து கொண்டிருக்கிறோம். வாழ்வளிக்க வந்தவர் நீரே என்றறிந்தும், செவிடரைப்போல், குருடரைப்போல் ஊமையரைப்போல் வாழ்ந்து கொண்டிருக்கும் குருட்டு வாழ்க்கையிலிருந்து விலகி, இறையரசின் தெய்வீகப் பாதையில் வாழத்தேவையான வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 04.02.2018 ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு திருப்பலி

### முன்னுரை

திருமதி. ராணி வில்சன்

I. யோபு 7:1-4,6-7 II. 1கொரி. 9:16-19,22-23 மாற்கு 1:29-39

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, திருவருகைக்காலம் நிறைவுற்று தவக்காலத்தில் நுழையும்முன் ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு இத்திருப்பலியில் பங்கேற்று பலன்பெற நாம் கூடி வந்துள்ளோம். திருஅவை ஒவ்வொரு காலத்திற்கும் அழகாக ஒரு மையக்கருப்பொருளைக் கொடுத்து நம்மைச் சிந்தித்து செயல்பட அழைக்கிறது. இன்றைய மையக்கருத்து "அழைப்பும் நம்பிக்கையும்" ஆகும். அழைக்கப்பட்டவர்கள் முதலில் தயங்கினாலும், பயந்தாலும் பிற்காலத்தில் ஊக்கமுடன் பணியாற்றினார்கள். முதலில் மோசே திகைப்பும், பயமும் மேலிட ஏதேதோ சொல்லி தப்பிக்க எண்ணினார். ஆனால் பணி ஏற்றுக்கொண்டபின் உன்னதமான விடுதலைத் தலைவராகத் திகழ்ந்தார். (வி.ப. 3) தந்தையாம் கடவுள் எசாயாவைத்தொட்டு குற்றப்பழியை நீக்கியப்பின் எத்தகைய பணியை ஆற்றினார். எரேமியாவும் தான் சிறுபிள்ளை என தவிர்க்கப்பார்த்தார். இறைவன் அவரையும் உயர்த்தினார்.

மீட்புத்திட்டத்தில் பங்கேற்க அன்னைமரிக்கு அழைப்பு வந்தபோது கலங்கினார். ஆனால் இன்று உலகத் தாயாகத் திகழ்கிறார். பேதுருவும் அதிக மீன்படுவதைக்கண்டு கலங்கி திகைப்புற்று "பாவியை விட்டு போய்விடும்" எனக் கூறினார். இறைஇயேசு அவரை திருஅவைத் தலைவராக உயர்த்தினார். புனித பவுலடிகளாரை அழைத்தபோது,

ஒளியையும், இருளையும், கண்டு அஞ்சினார். ஆனால் அவரை ஒரு சிறந்த நற்செய்தி அறிவிப்பாளராக இறைவன் உயர்த்தினார். நம்மையும் திருமுழுக்கு வழியாக இங்கு அழைத்துள்ளார். இந்த இறையழைத்தலைப் பக்தியோடும், நம்பிக்கையோடும் அணுகினால் இறைவன் நம்மை உயர்த்துவார். அதற்காக இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தூய பவுலடிகளாரைப் போல நற்செய்தி அறிவிக்க அழைக்கப்பட்ட எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறையழைத்தலுக்கேற்ப இறை மக்களை நம்பிக்கையின் மக்களாக உயர்த்தவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் வடிவே இறைவா, பொதுநிலையினர் பலர் பல நிலைகளில் நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் கலக்கம், பயம், இயலாமை இவற்றிலிருந்து காத்து, அரவணைத்து அவர்களையும், அவர்களின் குடும்பங்களையும், அவர்கள் செய்கின்ற எல்லாப் பணிகளையும் நிறைவாக ஆசிர்வதித்து வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் இறைவா, வறுமையினால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும், விவசாயிகளையும், வியாபாரிகளையும், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலங்களில் பணிபுரிவோர் அனைவரையும் அவர் தம் துன்பங்களிலிருந்து விடுவித்து மனதைரியம், ஆற்றல் கொடுத்து "இதோ நான் இருக்கிறேன் உங்களுக்கு உதவ" எனக்கூறி ஓடோடி வந்து உதவிட வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

## 05.02.2018 புனித ஆகத்தா கன்னியர் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி சம்பந்தன்

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் தூய ஆகத்தம்மாள் கி.பி. 251ல் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். கடவுளிடம் அன்பும், பக்தியும், கொண்டவர். இவர் வாழ்ந்த நாட்டின் ஆளுநன் குயிந்தானூஸ் என்பவன் இவரது வசீகர அழகினால் கவரப்பட்டு பாவ வாழ்க்கைக்கு இவரைக் கட்டாயப்படுத்தினான். ஆனால் புனித ஆகத்தா அவன் அழைப்புக்கு இணங்கவில்லை. ஆதலால் அவரை சிறையில் தள்ளினான். தன்னுடைய வலையில் விழவைக்க வேறோரு பெண்ணையும் அவரிடம் பேசவைத்தான். கற்புநெறியை உயர்வாக மதித்த நம் புனிதை மறுத்து விட்டதால் இவரின் மார்பகங்களை வெட்டும்படி கட்டளையிட்டு கொடூர செயலை புரிந்தான். ஆனால் இரவில் புனித

இராயப்பர் இவருக்குத் தோன்றி இவரை சுகப்படுத்தினார். இதுகண்ட அந்த கொடூர ஆளுநன் இவரை கூரிய கற்களின்மீதும், எரியும் நிலக்கரியின் மீதும் உருட்டச் செய்தான். அனைத்து தேவனைகளையும் சகித்துக்கொண்டு சிறையில் செபித்துக் கொண்டிருந்த வேளையில் இவரது உயிர் பிரிந்தது. தூய ஆகத்தா செபித்த "இயேசு கிறிஸ்துவே அனைத்துக்கும் நீரே ஆண்டவர். நான் உங்கள் மந்தையின் ஆடு. சாத்தானை ஜெயிக்க என்னை தகுதியுள்ளவராக்கும்" என்ற வார்த்தைகளை மனதில் நிறுத்தி தூயவராக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உலகின் ஒளியே இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால்துறவியர், பொதுநிலையினர் அனைவரும் ஒன்றிணைந்து திருமுழுக்கின் மூலம் பெற்ற விசுவாச வாழ்வை, அகிலமெங்கும் பரப்ப, அனைவரும் தத்தம் கடமைகளைக் கண்ணுங்கருத்துமாக ஆற்ற வேண்டிய மனோபாவத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. திக்கற்றவர்களின் சரணாலயமே இறைவா பசி, பிணி, பஞ்சம் இவைகளைத் தங்களின் உரிமைகளாகப் பெற்றுள்ள எளிய மக்களை இறை இரக்கத்தின் காலமாகிய இந்நாளில் கண்ணோக்கியருளும். கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களைக் கைவிடாதேயும். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, நான் உன்னை என்றும் கைவிடுவதுமில்லை" என்ற உம் திருவாக்கின்படி கருணைக்கூர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவிகளின் அடைக்கலமே இறைவா, தீமைகள் பெருகி வரும் இக்காலச் சூழலில் பாவத்தின் சுவடுகள் எங்கள் தலைமுறையினரை அணுகாவண்ணம் தெளிந்த மனதையும், தீர்க்கமான அறிவாற்றலையும் அவர்களுக்கு அளித்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் மனப்பக்குவத்தை அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதி அருளுகின்ற இறைவா, பிலாத்துவின் கொடூர தீர்ப்பினால் மாசற்ற நீரே எங்களுக்காகப் பாடுகளை அனுபவித்து உயிர் துறந்தீர். தவறே செய்யாமல் சந்தர்ப்ப சூழ்நிலையினால் சிறையில் வாடும் ஒருசில மனிதர்களிடம் இரக்கம் கொண்டு ஆறுதலும், தேறுதலும் தந்து மன அமைதியுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 06.02.2018 தூய கொன்சாலோ கார்சிய மற்றும் பால் மிக்கி திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இந்தியாவில் பிறந்து, வாழ்ந்து, மறைசாட்சியாக, புனிதராக வாழ்ந்தவர் கொன்சாலோ கார்சியா. இவர் பிறந்த இடம் தற்போது மும்பையில் வசை எனும் கடற்கரை நகரமாக இருக்கிறது. புனித கொன்சாலோ, தனது 25ம் வயதில் இயேசு சபைத் துறவிகளோடு இணைந்து ஜப்பானில் மறைப்பணியாற்றினார். மக்களின் துன்பங்களில் பங்கேற்று அவர்களை இறை நம்பிக்கையில் திடப்படுத்தினார். பிறகு பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்து குருவானார். நான்கு ஆண்டுகள் இறையாட்சியை அறிவித்து மக்களை நல்வழிப்படுத்திய கொன்சாலோ, அரசருக்கு எதிராகச் செயல்படுகிறார் என குற்றம் சாட்டப்பட்டு சிலுவை மரணம் விதிக்கப்பட்டார். இன்று புனிதராக, மறைசாட்சியாக விளங்கி நமக்கெல்லாம் இறை நம்பிக்கையைத் தன் வாழ்வு மூலம் எடுத்துச் சொல்கிறார். நாமும் இறை நம்பிக்கையுடன் வாழ்ந்து, தகுந்த நேரத்தில் இறையாட்சிக்காகவும், இறைவனுக்காகவும் நம் வாழ்வை அர்ப்பணம் செய்ய, நம்மையே தயாரிக்க, தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. நன்மையே உருவான இறைவா, திருச்சபைக்காக ஒவ்வொரு நாளும் தங்களையே அர்ப்பணிக்கும் அனைவரின் தியாகத்தை இறைமக்கள் உய்த்துணர்ந்து, திருச்சபையின் தலைவராம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரின் வழியையும் பின் தொடர உமதருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. மறைப்பரப்புப் பணிக்காகத் தங்களையே அர்ப்பணிக்கும் ஒவ்வொருவரையும் நீரே உமது தெய்வீக அருளால் நிரப்பி அவர்களுக்கு வரும் இடையூறுகளைத் தாங்கும் சக்தி தந்து உமது ஆட்சியை மக்களுக்கு போதிக்கும் இறை ஞானத்தையும் அருளையும் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பு நிறைந்த தந்தையே, இங்கு கூடியுள்ள அனைவரையும் உம் திருமலர்ப்பாதம் சமர்ப்பிக்கின்றோம். நீரே இவர்களை காத்து, தூய கொன்சாலோ போன்று இறை நம்பிக்கையை அளித்திட வேண்டுமென உம்மை மன்றாடுகின்றோம்.

4. அதிசயங்களின் தேவனே, எம் இளையோர் தங்களின் அழைப்புக்கேற்ப திருச்சபையைக் கட்டியெழுப்ப இறை பற்றில் உறுதியையும் ஆர்வத்தையும் நிறைவாய் அவர்களுக்கு தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. அன்பு இறைவா, கைவிடப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும், பல்வேறு இடையூறுகளால் அவதியுறும் மக்களுக்கு ஆதரவாகவும், தேற்றரவாகவும் இருந்து அவர்களுக்கு உமது தூய ஆவியின் அருளை மென்மேலும் பொழிந்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 08.02.2018 தூய ஜோஸ்பின் பக்கித்தா திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது "எங்கள் கறுப்புத் தாய்" என எல்லோராலும் அழைக்கப்படும் ஜோஸ்பின் பக்கித்தாவின் விழாவை கொண்டாடுகிறது. ஆப்பிரிக்கரான இவர் வழக்கம்போல் கடத்தலுக்குள்ளாகும் ஆப்பிரிக்க ஏழைகளுள் ஒருவர். ஏறக்குறைய 1877-1889 வரை மூன்று முறை வெவ்வேறு முதலாளிகளிடம் விற்கப்பட்டார். இந்த தாங்க முடியாத வாழ்க்கையில் இவர் சின்னா பின்னமாக மாறிக்கொண்டிருந்ததால் தன் சொந்த பெயரையே மறந்தார். அரபு கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இவருக்கு அவர்கள் வைத்த "பக்கித்தா" அதாவது அரபு மொழியில் "அதிர்ஷ்டம்" எனப்பொருள்படும். அந்தப் பெயரையே அவர் வைத்துக்கொண்டார். அடிமைச் சந்தையில் விற்கப்பட்டு, உடல், மன ரீதியில் பல கொடுமைகளை சந்தித்தார். தன் உடல்மீது மாவினால் கோடுகளை வரைந்து, கூர்மையான கத்தியைக் கொண்டு அதனை அப்படியே வரைந்தார்களாம். என்றும் அழியாமல் இருக்க அந்த கீரல்களில் உப்பை தேய்த்தார்களாம். இப்படி 114 விதமான வரைபடங்களை தன் மார்பிலும், வயிற்றிலும், வலது கையிலும் வரைந்தார்கள். அந்த அனுபவங்கள் தன் வாழ்வில் ஏற்பட்ட உச்சக்கட்ட கொடுமைகளாக கருதுவதாக அவரே குறிப்பிட்டுள்ளார்.

காலப்போக்கில், சூடானிலிருந்த இத்தாலியைச் சார்ந்த கலிஸ்தோ என்பவரால் அதிக விலைக் கொடுத்து வாங்கப்பட்டார். இத்தாலியில் அந்த புது முதலாளியின் வீட்டில்தான் பக்கித்தா முதன் முதலில் அன்பை, அமைதியை கண்டுணர்ந்தாள். 1890ல் திருமுழுக்குப்பெற்று, பின்னாலில் இறைப்பணிக்காகத் தன்னையே கையளித்தாள். ஐம்பது ஆண்டுகள் கடவுளின் அன்புக்குச் சாட்சியாக வாழ்ந்தார். அவரது வார்த்தைகள், "நல்லவராக இருங்கள், ஆண்டவரை அன்பு செய்யுங்கள், அவரை அறியாதவர்களுக்காக மன்றாடுங்கள், அவரை அறிவியுங்கள், கடவுளை அறிவதே மிகச் சிறந்த அருளாகும்" என்பதே. எங்கள் அன்னை மரியே... எங்கள் அன்னை மரியே.. என்று உச்சரித்த உதடுகளுடன் 1947 பிப்ரவரி 8ல் மறைந்தார். 2000ல் திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் இவரை புனிதராக உயர்த்தினார். ஆதிக்க சக்திகளின் முகவரியாக இன்றும் தொடரும் அடிமை முறைக்கும், ஆள்கடத்தல்களுக்கும் இலக்கானவர்களுக்காக புனித ஜோஸ்பின் பக்கித்தாவின் வழியாக தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடி செபிப்போம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும், சோர்வுற்றோருக்கு பலமாகவும், வழிதவறியோருக்கு நல்வழிகாட்டியாகவும் திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் இருப்பிடமே இறைவா, இன்று அமைதி தேடி ஏங்குகின்ற மக்களின் வாழ்வில் அடிமைத் தனங்கள் மறைந்து சமத்துவமும், சகோதரத்துவமும், அன்பும், சுதந்திர அனுபவமும் கிடைக்கவும் அதற்காக நாங்கள் உழைத்திடவும் நல்ல மனதைத் தந்தருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நல்ல ஆயன் நானே, உம்மை கண்ட பின்பும் சாலமோன் அரசன் தன் நம்பிக்கையில் தடுமாறியது போன்றில்லாமல், ஒரு சாதாரண பெண்ணின் நம்பிக்கையை நாங்களும் வாழ்வில் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்பதை உணர்ந்து வாழ வரமருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. விசுவாசத்தின் ஊன்றுகோலே எம் இறைவா, இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்தினால் இன, இட, நிலை, பால் வேறுபாடுகளைக் கடந்து இறைமக்களாகியுள்ள நாங்கள் அனைவரும் இறைவனின் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 09.02.2018 அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் திருப்பலி

**முன்னுரை**

சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்

யூசேபியா பாலோமினா ஏனெஸ் 1899-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் நாள் ஸ்பெயின் நாட்டு சாலமானகா மாநிலத்தில் கோண்டால் பினோ என்ற குக்கிராமத்தில் பக்தியுள்ள உழைப்பாளிகள் குடும்பத்தில் பிறந்தார். 9-வது வயதில் புதுநன்மை வாங்கி இறையருளில் திளைத்தார். ஏழ்மையின் காரணமாக தனது படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு வேலை செய்து குடும்பத்திற்கு உதவினார். ஞாயிற்றுக்கிழமைகளில் சலேசிய கன்னியர் நடத்திய ஆரட்டரிக்குச் சென்றார்.

தன்னையே முழுவதும் இயேசுவுக்கு அர்ப்பணிக்க முடிவு செய்து சலேசியக் கன்னியர் ஒருவரிடம் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தி அவரது வழிக்காட்டுதலால் அச்சபையில் சேர்ந்தார். இவர் தம் வாழ்விலும் வார்த்தையிலும் விளங்கிய புனிதத்துவத்தை மாணவிகள் கண்டுணர்ந்தனர். இவர் இயேசுவின் இரக்கத்தையும் ஐந்து

காயங்களைப்பற்றியும் அடிக்கடி எடுத்துரைத்தார். 1932-ம் ஆண்டு ஆஸ்மா நோயால் பீடிக்கப்பட்டார். மூன்றாண்டுகள் அந்நோயால் துனப்பப்பட்டு 1935-ம் ஆண்டு பிப்ரவரி 10-ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். 2004-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் விசுவாசம் பக்தி, இறைபயம், நாமும் பெற்றிட இத்திருப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**பதில்:** ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

1. புண்ணிய வாழ்வின் அடித்தளமே இறைவா, கொடிய வறுமைப் பிடியிலிருந்து, துவண்டு போகாமல், தளரா மனமும், விடாமுயற்சியும் கொண்ட சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் எங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து எந்நாளும் பிரமாணிக்கமாக வாழும் மனத்திடனைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. தூய வாழ்வின் பிறப்பிடமே இறைவா, தனது அன்றாட கடமைகளையும், வாழ்க்கைப் பணிகளையும் புன்முறுவலுடன் ஏற்று, அயராமல் உழைத்து தனது வாழ்வாலும், வார்த்தையாலும் புனிதத்தைப் பரப்பிய சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் கடமைகளைச் செவ்வனே செய்து, புனிதமடைய வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
3. துறவற வாழ்வின் தூண்டுதலே இறைவா, சகோதரி யூசேபியாவைப்போல் தியாக உள்ளத்துடன் பணிபுரியும் சலேசிய சகோதரிகளை ஆசீர்வதியும். எண்ணற்ற இளம்பெண்கள் இறையழைப்புக்குச் செவிமடுத்து, துறவற வாழ்வினை மேற்கொண்டு, ஆர்வமுடன் பணிபுரிய வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. குணமளிக்கும் மருத்துவரே எம் இறைவா, பலவிதமான நோயினால் துனப்படுவோரை உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் நோயை குணமாக்கி, முழுமையான உடல் உள்ள நலனைத் தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்றும், உம்மில் ஆழ்ந்த விசுவாசம், நம்பிக்கை, இறைபயத்தை உணர்ந்தவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 11.02.2018 ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. லேவி. 13: 1-2,44-46 II.1கொரி. 10: 31-11:1 மாற்கு 1: 40-45

இன்று பொதுக்காலம் 6ம் ஞாயிறு. தூய லூர்து அன்னையின் விழாவையும், உலக நோயாளர் நாளையும் இன்று நாம் நினைவு கூறுகிறோம். முற்காலத்தில் ஒருவருக்கு நோய் வந்து, அது தொழுநோய் எனக்கண்டால், அவரைக் குடும்பத்திலிருந்தும், சமூகத்திலிருந்தும் ஒதுக்கி வைத்து, ஊருக்கு வெளியே ஒதுக்கி வைப்பர். அவர் ஏறக்குறைய வாழத்

தகுதியற்றவர் என்னும் நிலை அவர் நோயுள்ள நாள்வரைத் தீட்டுள்ளவர். அவருடன் எவரும் உறவு கொள்ளமாட்டார். ஆனால் இயேசுவோ அத்தகையோரைக் குணமாக்கி அவர்கள் இறைவனை மகிமைப்படுத்தச் செய்தார். இயேசு செய்த எல்லா நற்செயல்களும், அதிசய அற்புதங்களும் கடவுளாம் தந்தையின் மகிமைக்காக மாட்சிமைக்காகவே செய்தார்.

இதையே இன்றைய வாசக நற்செய்தி விளம்புகிறது. நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அது இறைவனின் மகிமைக்காகவே இருத்தல் வேண்டும் என்று தூய பவுல் அடியாரும் வாசகத்தில் குறிப்பிடுகின்றார். தூய மரியன்னை பிறந்தது முதல் கடைசி வரையிலும் தன்னைத்தாழ்த்தி எல்லாச் செயல்களிலும் இறைவனை மகிமையடையச் செய்து, உலகுள்ளவரை எல்லாத் தலைமுறையினரும் வணக்கம் செலுத்தத்தக்க மேலான தாயானார். எனவே நமது செயல்களை இறைவனுக்கு ஏற்புடையனவாகவும் இறைவனின் மகிமைக்காகவும் செய்து உலக நோயாளர் தினமான இன்று நோயாளிகளைப் பரிவோடும் பாசத்தோடும் அணுகி நம்மால் இயன்ற உதவிகளைச் செய்து, ஆறுதலோடு அரவணைத்து, அன்னை மரியாவைப்போல தாழ்ச்சி நிறை உள்ளத்தோடு வாழ்ந்து இறையருளைப் பெற்றுக்கொள்ள திருப்பலியில் மன்றாடுவோம்.

## விசுவாசிகளின் மன்றாட்டு

1. **திருத்தந்தைக்காக:** அன்பு தந்தையே இறைவா, உமது திருச்சபைகளை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், திருச்சபையையும் மக்களையும் இறையுணர்வில் தொடர்ந்து வழிநடத்தவும், உலகத்தலைவர்களின் முரணான கருத்துக்களுக்கு வளைந்துக் கொடுக்காமல் இறையரசின் நீதியை நிலைநாட்டிட துணிவும் உற்சாகமும் தந்து மக்களை மறைப்போதனையில் வலுப்படுத்திவும் வேண்டிய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. **திருச்சபைக்காக:** நீதியுள்ள தந்தையே, இத்திருவழிபாட்டில் பங்கேற்போர் யாவரும் இறைப் பிரசன்னத்தை உணரவும், இறையனுபவம் பெறவும் பாவ நோய்கள் நீங்கி ஆறுதல் பெறவும், பங்கை நிர்வகிக்கும் பங்குத்தந்தை, பங்கின் வளர்ச்சிக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் துணைபுரியவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. **இளையோருக்காக:** இரக்கமுள்ள தந்தையே, இளையோர்கள் அன்றாடம் திருவிவிலியத்தை வாசித்து அதன்படி ஒழுகவும், போலியானவைகளைக் கண்டு ஏமாறாமல் உண்மையை அறியும் ஆற்றல் பெறவும், இவர்களின் நியாயமான வேண்டுதல்கள் நிறைவேறவும், நல்ல எதிர்காலம் அமைந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. **நாட்டு மக்களுக்காக:** உண்மையுள்ள இறைவா, எல்லா மக்களும் நிம்மதியாக வாழ நல்ல தலைவர்களையும், தலைமையையும் நீர்தாமே தேர்ந்தெடுத்து நல்கவும், வறுமை, பொருளாதாரப் பிரச்சனைகள், போராட்டங்கள், வன்முறைகள் ஏதுமின்றி யாவரும் இன்புற்று வாழும் நேர்மையான ஆட்சியாளர்களும் ஆளுகையும் அமைந்திடவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.02.2018 விபூதி புதன் தவக்காலம் - தொடக்கம் திருப்பலி

**முன்னுரை**

திரு. P. விக்டர்

I. யோவே. 2:12-18 II. 2கொரி. 5:20-6:2 மத். 6:1-6,16-18

ஒவ்வொரு ஆண்டும் உயிர்ப்பு ஞாயிறுக்கு முந்தின ஏழு வாரங்களைத் தவக்காலமாக கொண்டாடி வருகின்றோம். அதன் துவக்க நிகழ்வாக இந்த திருநீற்று புதனை அனுசரிக்கின்றோம். பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேல் மக்கள் தங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி ஆண்டவரது இரக்கத்தை வேண்டி நின்றபொழுதெல்லாம் தாங்கள் உடலில் சாம்பலைப் பூசிக்கொண்டு உபவாசமிருந்து செபித்து வந்ததை திருவிவிலியத்தின் பல பகுதிகளில் காணலாம். உதாரணமாக யோனா 3:6இல் நினிவே மக்கள் யோனா இறைவாக்கினரின் எச்சரிக்கைக்கு செவிமடுத்து அரசன் முதல் விலங்குகள் வரை சாம்பல் பூசிக்கொண்டு நோன்பிருந்ததை வாசிக்கின்றோம்.

அதேபோன்று எஸ்தர் 4:1ல் யூத மக்களினத்தை பொல்லாத ஆமானின் சதித்திட்டத்திலிருந்து மீட்பதற்காக எஸ்தர் அரசியார் மட்டுமன்றி யூத மக்கள் அனைவரும் நோன்பிருந்ததைக் காணலாம். இதனால் வரவிருந்த அழிவிலிருந்து யூதமக்களினம் காப்பாற்றப்பட்டது. சாம்பலைப் பூசிக்கொள்வது மனந்திரும்புதலுக்கு அடையாளமாக காட்டப்பட்டது (மத்.11:21). இதன் தொடர்ச்சியாகத்தான் இக்காலங்களில் நமது நெற்றியில் சாம்பல் அல்லது திருநீறு பூசப்படுகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்புவரை இப்படி நெற்றியில் சாம்பல் பூசும்பொழுது "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய், மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்" என்ற வார்த்தைகளை குருவானவர் உச்சரிப்பார்.

ஆனால் இன்று, "மனந்திருந்தி நற்செய்தியை நம்பு" என்கிற வார்த்தைகளை உச்சரிக்கின்றார். அது என்ன நற்செய்தி? "பாவிகளாகிய நம்மை மீட்க இயேசு மனிதனானார், நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். மீண்டும் திரும்பி வந்து நம்மைத் தம்மோடு சேர்த்துக்கொள்ள இருக்கின்றார்" என்பதுதான் நற்செய்தி. இதை நம்பினால் நமது வாழ்வு மாற்றமடையும். இந்த உலகில் எப்படி வாழவேண்டுமென இயேசு நமக்குக் கற்றுத் தந்திருக்கின்றார். அவற்றையெல்லாம் கடைப்பிடித்து வாழ நம்மை அழைக்கும் நாள்தான் இந்த "திருநீற்றுப்புதன்". தொடர்ச்சியாக 7 வாரங்கள் மட்டுமன்று நம்

வாழ்நாள் முழுமைக்கும் மனமாற்றம் தொடரவேண்டுமென்பது தான் திருச்சபையின் நோக்கம். எனவே இந்த தவநாட்களில் இதுவரை நம்மால் விடமுடியாத ஏதாவது ஒரு கெட்ட குணத்தை அல்லது செயலை விட்டுவிட ஆண்டவருக்கு வாக்களிப்போம். இப்படி வாரம் ஒரு தீர்மானம் என்றால் ஏழுவாரங்களில் ஏழு கெட்ட செயல்களிலிருந்து விட்டுவிட நம்மால் முடியும். இப்படி நல்ல தீர்மானங்களை எடுக்கவும், எடுத்த தீர்மானங்களைச் செயல்படுத்தவும் வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

1. அருள் வழங்கும் வள்ளலே, திருச்சபையின் தூண்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உமது பாதத்தில் சமர்ப்பிக்கின்றோம். இவர்களுக்குத் தேவையான அனைத்து அருள் வரங்களையும் நிறைவாகப் பொழிந்து ஆசிர்வதிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. தவக்காலம் மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்ந்து இந்நாட்களில் நாங்கள் கிறிஸ்துவுக்குப் பிரியமான செயல்களைச் செய்வதற்கு கற்றுத்தாரும். கற்றவற்றில் நிலைத்து நின்று பிறருக்கு உதவும் நல்ல குணநலக்களைத் தந்து பிறரையும் மகிழ்விக்கத் தேவையான மனஉறுதியைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. எமக்காகத் துன்பங்களை ஏற்ற இறைவா, இந்த தவநாட்களில் எங்களைத் துன்புறுத்துவோரை மன்னிக்கவும், இகழ்வோருக்காகச் செபிக்கவும், எங்களை வெறுப்போருக்கு ஆசி கூறவும், எங்களைப் பகைப்பவர்களை அன்பு செய்யவும், சமாதானத்தின் தூதுவர்களாக நாங்கள் வாழவும் வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மன்னிக்கும் மனம் நிறைந்த தந்தையே, இத்தவக்காலத்தில் எங்களின் வாழ்வில் உமக்கெதிராகப் பல பாவங்களைச் செய்திருந்தாலும், மன்னிக்கும் மனமில்லாமல் வாழ்ந்திருந்தாலும், அவற்றையெல்லாம் நீர் மன்னிப்பதுபோல நாங்களும் எங்களை வெறுப்போரிடமும், மன்னிக்காதவர்களிடமும் உமதன்பையும், சமாதானத்தையும் ஒற்றுமையும் காட்டியருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 18.02.2018 தவக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

I. தொ.நூ. 9: 8-15 II. 1பேதுரு 3: 18-22 மாற்கு 1: 12-15

இறையேசுவில்பிரியமானவர்களே,தவக்காலத்தின்முதல்வாரத்தில் இருக்கும் நாம் இறையருளையும், அன்பையும் பெற்று இறைவனோடு ஒன்றித்திருக்க, நம்மையே நாம் தயாரிக்க இன்றைய வாசகங்கள் அழைப்பு விடுக்கின்றன. மனித உள்ளம் பாவத்தில் மூழ்கி, கடவுளை விட்டுவிட்டு வெகு தொலைவில் சென்றதால் கடவுளின் கோபம் வெள்ளப்பெருக்கின்

வழியாக வெளிப்பட்டது. வெள்ளப்பெருக்கில் நோவாவும் அவரது குடும்பமும் தவிர மனித இனம் முழுவதும் அழிந்தது. நோவாவும் அவர் குடும்பமும், இறை அச்சத்தோடும் நேர்மையோடும் வாழ்ந்தனர். அவர்கள் மனதாலும் குணத்தாலும் கடவுளோடு ஒன்றித்திருந்தனர்.

எனவே நோவா காப்பாற்றப்பட்டு இறைவனுக்கு நன்றிப் பலி செலுத்தினார். இறைவனோ மனிதனோடு கொண்டுள்ள அன்பின் உறவை வெளிப்படுத்த "இனி இவ்வாறு இப்பூமியை அழிக்க மாட்டேன்" என்று வாக்குறுதி அளித்தார்". நோவா காலத்துத் தண்ணீர் மக்களை அழித்தது (தொநூ.9:8-15). ஆனால் யோவான் நற்செய்தியில் 7:37-39ல் "நான் தரும் தண்ணீரோ மக்களை வாழவைக்கும். தூய ஆவியாரே நான் தரும் தண்ணீர் அவரால் உங்களை அருள்பொழிவு செய்துக் கொள்ளுங்கள்" என்கிறார் இயேசு.

துன்புறும் கிறிஸ்துவர்களுக்குத் தேவையான மனத்திடமும், உறுதியான விசுவாசமும் வருகின்ற துன்பங்களையும், கொடுமைகளையும், நம்பிக்கையோடும் மகிழ்ச்சியோ ஏற்கும் சக்தியையும் இறைவன் வழங்குவார் என்றும் இரண்டாம் வாசகம் தூய பேதுரு வழியாக எடுத்துரைக்கிறது. கடவுளால் நோவாவும் அவர் குடும்பமும் வெள்ளப்பெருக்கின் அழிவிலிருந்து மீட்கப்பட்டது போல அனைத்து நம்பிக்கையுடைய கிறிஸ்தவர்களும் திருமுழுக்கு நீர் வழியாக இயேசுவால் மீட்கப்பட்டு ஆவியின் புதுவாழ்வும் பெறுகின்றனர்.

உலகச் சம்பந்தமான வாழ்க்கை முறைகளைத் தவிர்த்து, இறைமகன் இயேசு தனிமையான பாலைவனத்திற்கு இறைவனைத் தேடிச் சென்றது போல நாமும் இறையனுபவம் பெற இறைவனை நோக்கிச் செல்வோம். அதற்காக நமக்குக் கொடுக்கப்பட்ட காலமே தவக்காலம். தவக்காலம் அருளின்காலம் நாம் கடவுளுடன் கொண்டுள்ள அன்புறவைப் புதுப்பித்து அவருக்காக வாழ முனைகின்ற காலம். இத்தவக்காலத்தில் நம் பாவத்திற்காக மனம் வருந்தி, கடவுளின் மன்னிப்பைப்பெற்று கடவுளுக்கும் நமக்குமிடையே ஒரு அன்பின் உடன்படிக்கை உருவாக்குவோம். சோதனை, துன்பம், பிரச்சனைகளை வெல்ல இயேசுவைப்போல செபிக்கவும், கடவுளோடும் தூய ஆவியோடும் என்றும் ஒன்றித்திருக்கவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், இருபால் துறவறத்தார் அனைவரும் தூய ஆவியின் கனிகளாலும் வரங்களாலும் நிரப்பப்பட்டு தங்களின் பணிவாழ்வில் தவக்காலத்தின் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து அதை மக்களுக்கு எடுத்துரைக்கத் தேவையான உமது ஞானத்தை அளித்தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மையே உருவான இறைவா, உலக ஆடம்பரங்களிலும் கேளிக்கைகளிலும் அதிகமாக ஈடுபடும் நாங்கள் உமது வார்த்தையை வாசிக்கவும், தியானிக்கவும், அதன் பொருளுணர்ந்து வாழ்வாக்கவும் வரம்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. நம்பிக்கையின் நாயகனே இறைவா, எங்களின் விசுவாச வாழ்வில் தூய ஆவியின் துணை எப்போதும் இருந்திடவும், அவர் வழியாக எங்களின் வாழ்வில் ஏற்படும் சோதனைகள், ஏமாற்றங்கள், எதிர்ப்பார்ப்புகள் அனைத்தையும் வென்றிட, தூய ஆவியின் துணையை என்றும் நாடிடும் தாழ்மையான உள்ளத்தைப் பெற்றிட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 21.02.2018 புனித பீட்டர் தமியான் திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி வில்சன்

அன்புள்ள இறைமக்களே, இன்று நம் திருச்சபையானது தூய பீட்டர் தமியானின் வழியை கூறுகின்றது. ரவன்னை என்ற ஊரில் பிறந்த இவர் சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தவர். இவரது குடும்பத்தில் இரு சகோதரர்கள். ஒருவர் குடும்பத் தலைவர், மற்றொருவர் குருவானவர், மூத்த சகோதரர் பீட்டரைப் பல பணிகளில் ஈடுப்படுத்தி பலவித கொடுமைகளுக்கு உள்ளாக்கினார். ஆயினும், பீட்டர் தமது அண்ணன் பெயரையும் தன்னோடு நன்றியுணர்வோடு இணைத்துக் கொண்டார். படிப்படியாக முன்னேறி பேராசிரியர் பட்டமும் பெற்றார். சிறுவயது முதல் பிறரின் குற்றங்களுக்காகப் பரிகார முயற்சிகள் செய்தல், முள் ஒட்டியானம் அணிதல், மிகக் குறைந்த நேரமே உறங்குதல் இப்படி பல்வேறு வழிகளில் தம்மைப் புனிதப்படுத்திக் கொண்டார்.

சிறு வயதில் வறுமையில் உழன்றதால் தினமும் தமது உணவு வேளையில் ஒன்றிரண்டு பேரைத் தம்மோடு பகிர்ந்து உண்ணச் செய்வார். நாளடைவில் உலகைத் துறந்து துறவற மடத்திற்குச் செல்ல முடிவெடுத்து, புனித ரோமுவார்டு என்பவரால் சீர்த்திருத்த பெனடிக்டின் சபையில் துறவியானார். அதுமுதல் முழுமையாக திருநூலைக் கற்று ஆராய்ச்சி செய்து, விரைவில் தலைமைப் பொறுப்பேற்று 5 இறைமடங்களை நிறுவி தனிமை, பிறரன்பு, தாழ்ச்சி இவற்றை துறவியர் ஆழமாக வாழ பணித்தார். திருத்தந்தை 9ம் ஸ்டீபன் இவரை ஆயராக உயர்த்தினார். ஆனால் இவர் துறவு மடத்தையே விரும்ப அடுத்து வந்த திருத்தந்தை அவரது விருப்பப்படி விட்டுவிட்டார்.

ஆயராக பொறுப்பேற்ற நாள்முதல் குருக்கள் தங்கள் கடமைகளைக் கருத்தூன்றி நிறைவேற்றவும் கோயில் சொத்துக்களை அபகரிக்காமல், நேர்மையில் முன்னேறவும் வலியுறுத்தினார். தேவையில்லா பயணத்தை தவிர்த்து, புனிதத்தில் வாழ்ந்து வாழ வைத்து வெற்றிக் கண்டார். கி.பி. 1072

பிப்ரவரி 22ல் ரவன்னாவில் உயிர் நீத்தார். தூய வாழ்வு வாழவில்லையேல் இயேசுவோடு இணைய இயலாது இப்புனிதரைப்போல வாழ முயலுவோம் அல்ல, வாழவோம், மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திரு அவையின் திருத்தந்தை, பேராயர்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர் அனைவரும் இன்று சிறப்பிக்கும் புனித பீட்டர் தமியானைப்போன்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. ஏழைகளைத் தேடிய இறைவா, உமது நற்செய்திப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து அருட்பணியாளர்கள், பொதுநிலையினர், நற்செய்தி மற்றும் இறைவாக்குப் பணியாளர்கள் அனைவரும் பதவியைத் தேடாமல் ஏழைகளைத் தேடிச்சென்று வாழ்வளிக்கும் வார்த்தையை எடுத்துரைக்க தேவையான அனைத்து அருளையும் தந்தருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. திருநூலின் முதல்வரே இறைவா, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு தனிமனிதனும் திருநூலைக் கற்று தேர்ச்சிப்பெற்று, அதுகூறும் கருத்தில் கருத்தூன்றி வாழ்ந்து புனிதத்தில் பயணிக்க வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. பரிசுத்தரே இறைவா, புனித தமியான் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து வெற்றிக் கண்டதுபோல எங்கள் திருஅவையும் வெற்றிக்காண அனைத்து அருள்வரங்களையும் நிறைவாக அளித்தருள வேண்டுமென்று சிரம் தாழ்த்தி உம்மை மன்றாடுகிறோம்.

## 22.02.2018 திருத்தூதர் பேதுருவின் தலைமைப்பீடம் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணி சம்பந்தன்

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இன்று நமது திருஅவை திருத்தூதர் தூய பேதுருவின் தலைமைப்பீடம் விழாவைச் சிறப்பிக்கின்றது. "உன் பெயர் பேதுரு, இந்த பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" (மத். 16:18). தூய பேதுரு தன் திருமுகத்தில் கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியாக தன்னுடன் இருக்கும் மூப்பர்களுக்கு, தங்கள் பொறுப்பில் இருக்கும் மந்தையை மேய்த்துப் பேணிக் காக்குமாறும், கட்டாயத்தினால் அல்ல, எந்த ஊதியத்திற்காகவும் செய்யாமல் ஒப்படைக்கப்பட்ட மந்தையை அடக்கியாளாமல் முன்மாதிரிகளாக இருந்து கடவுளுக்கேற்ப மன விருப்பத்துடன் செயல்படுங்கள்" என்று அறிவிக்கிறார்.

இயேசுவின் போதனைகளையும் அருஞ்செயல்களையும் கண்ட மக்கள் அவரை திருமுழுக்கு யோவான் என்றும், எலியா என்றும், இறைவாக்கினர்களில் ஒருவர் என்றும் அடையாளம் கண்டனர்.

இயேசுவே மெசியா என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது. இயேசுவின்பால் அசைக்க முடியாத ஆழ்ந்த விசுவாசம் கொண்டவராகவும், வலிமையான பாறையாகவும், மெசியா வாழும் கடவுளின் மகன் என அடையாளம் காட்டியவராகவும் தூய பேதுரு காணப்பட்டதால் அவரை திரு அவையை வழி நடத்தும் தலைமைப் பீடமாக ஏற்று விண்ணரசின் திறவு கோலும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கி.பி. 354ஆம் ஆண்டு முதல் திருஅவை, திருத்தூதர் தூய பேதுருவின் தலைமை பீட விழாவைச் சிறப்பிக்கிறது. அவரின் தலைமையில் பல்வேறு சிக்கல்கள், பிளவுகளைச் சந்தித்தாலும் தொடர்ந்து இயேசுவை அறிவிக்கவும், விண்ணரசிற்காக மக்களைக் கூட்டிச் சேர்க்கவும் செயல்படுகிறது. திருச்சபையின் சொந்த பிள்ளைகளாகத் திகழும் நாமும், இயேசுவை பின்பற்றி அவரை அறிவிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, உமது வழிவரும் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இயேசுவைப் பின்பற்றி, திருத்தூதர் தூய பேதுருவின் வழியில் நம்பிக்கை மிக்கவர்களாகவும், கிறிஸ்துவிற்குச் சாட்சி பகரும், சாட்சிய வாழ்வை வாழக் கூடியவர்களாகவும் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நற்செய்தியின் நாயகனே இறைவா, இந்நாட்களில் அரசியல் களங்களில் உருவாகும் புதிய உத்திகளையும் புதிய குழுக்களின் இயக்கங்களையும் நீர்தாமே ஆய்ந்தறிந்து, கண்டறிந்து மக்கள் நலனையும் பாதுகாப்பையும் மனதில் நிறுத்தி சேவை மனப்பான்மைக் கொண்ட நல்ல பொறுப்பாளர்களை எம் தேசத்திற்கு தரும்படியாக தூய பேதுரு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. ஒற்றுமையின் நாயகனே இறைவா, உலகெங்கும் பரவிச் செயல்படும் அனைத்து கிறிஸ்துவ பிரிவினைச் சபைகள் ஒன்று சேர்ந்து ஒரு குடையின் கீழ் செயல்படும் நன்னாள் வராதா என்று ஏங்கும் மனதுடன் செயல்படும் மக்களின் ஏக்கங்களுக்குச் செவிசாய்த்து ஒன்றிப்பிற்கு அருள்புரிய வேண்டுமென்று திருத்தூதர் தூய பேதுரு வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

4. விசுவாசத்தின் நாயகனே இறைவா, திருத்தூதர் தூய பேதுருவின் அறிவுரைகளாக "நீங்கள் உங்கள் நம்பிக்கையோடு நற்பண்பும், நற்பண்போடு அறிவும், அறிவோடு தன்னடக்கமும், தன்னடக்கத்தோடு மனஉறுதியும், மனஉறுதியோடு இறைபற்றும், இறைப்பற்றோடு சகோதர

நேயமும் சகோதர நேயத்தோடு அன்பும் கொண்டு விளங்குமாறு முழுமுயற்சி செய்யுங்கள்" என்ற வார்த்தைகளின்படி நாங்களும் நம்பிக்கையுடன் செயலாற்றக்கூடிய மன உறுதியைத்தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

## 25.02.2018 தவக்காலம் 2ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

I. தொ.நூ. 22:1-2,9-13,15-18 II. உரோ. 8:31ஆ-34 மாற்கு 9:2-10

இன்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உருமாற்ற திருநாள். நமது வாழ்வை அலசி ஆராய்ந்து பார்த்தோமானால் நமக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட அற்புதமான ஒப்பற்ற காலம்தான் இந்த தவக்காலம். ஆம் நம்மையே, சீர்த்தூக்கிப்பார்த்து, நமது குற்றங்களைக் களைந்து ஆன்ம சோதனைச் செய்து தூய வாழ்வு வாழ முயற்சிக்கும் புனித காலம் இது. துன்ப துயரம் சூழ்ந்த இவ்வுலகில் எந்த நேரத்தில் யாரிடமிருந்து எப்படி துன்பமும் சோதனைகளும் வரும் என கூறமுடியாது. எனவே நாமும் ஆபிரகாமைப்போல் நம்பிக்கையுடன் இறைவன் என்னோடு இருக்கின்றார் என உறுதியடன் செயல்பட்டால் வெற்றி நிச்சயம். சிலுவையின்றி உயிர்ப்பு இல்லை. துன்பமின்றி இன்பமில்லை.

தமது ஒரே மகனையே பலியாகக் கொடுத்து நம்மை மீட்ட கடவுள் நம்மோடு இருக்கும்போது நமக்கு எதிராக யார் என்ன செய்ய முடியும்? எனவே அடைக்கலப்பாறையான இயேசுவின்மேல் நம்பிக்கை வைத்து ஒவ்வொருவரும் அவரைப்பின்பற்றி வாழ்வில் ஏற்படும் எல்லா துன்பத்துயரங்களிலும் சோதனைளிலும் நிதானமாக வாழ கற்றுக்கொள்வோம். தாபோர் மலைமீது இயேசு உருமாற்றம் அடைந்தபோது "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று கூறிய விண்ணகத்தந்தை நம்மையும் பார்த்து இவரே என் அன்பார்ந்த மகன், மகள் என்று கூறுவது எப்போது? நாமும் நமது துன்பச்சிலுவைகளைத் தூக்கிக்கொண்டு அவரின் விருப்பத்தை நிறைவேற்றும்போது தான் என்பதை மனதிலிருத்தி இத்திருப்பலியில் பங்கேற்று மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் திருப்பொழிவுச் செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், அருள்பணியாளர்கள் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது மந்தையை நல்ல முறையில் காத்து வழிநடத்த அவர்களுக்கு ஆற்றலைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் தந்தையே இறைவா, ஆபிரகாமைப்போல் நாங்களும் உமது கட்டளைகளைக் கடைப்பிடித்து நம்பிக்கையுடன் வாழவும்,

மற்றவர்களின் குற்றங்குறைகளை மன்னித்து அவர்களோடு அன்புறவோடும் சமாதானத்தோடும் வாழ்ந்திடவும், வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களுக்காக கடவுளின் வலப்பக்கமிருந்து பரிந்து பேசும் இயேசுவே, உம்மைவிட்டுப் பிரிந்துப்போய் மனம் போன போக்கில் சீரழிந்து கிடக்கும் எம் வாலிபப்பிள்ளைகளை கருணைக்கூர்ந்து உமது பரிசுத்த ஆவியால் அவர்களை நிரப்பி உம்வழியில் நடத்திச்செல்ல வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் தந்தையே இறைவா, இத்தவக்காலம் எமக்கு விண்ணக வாழ்விற்கு செல்ல ஏற்றப்பாதை என்பதை மனதில் கொண்டு எம் கடந்த கால வாழ்வில் செய்த எல்லா குற்றங்குறைகளையும் நினைத்து அதற்கான ஒறுத்தல்-செபம் தபமுயற்சிகளை செய்ய எமக்கு

# பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

## தவக்காலம் ஏன்? எப்படி?

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

தவக்காலம்... தவக்காலம் என்றால் இளந்தளிர் அல்லது வசந்த காலம் என்பது பொருள். குளிர்காலத்திற்குப்பின் வெறுமையான மரங்களில், செடி கொடிகளில் புதிய தளிர்கள் தோன்றும். அதுபோலவே தவக்காலம் என்பது பாவ வாழ்வை, குற்ற பழிவுணர்வுள்ள வாழ்வை சுயநலமிக்க கொடுமைகளைவிட்டு, கடவுளின் குடிமக்களாக வாழ புறப்படும் தயாரிக்கும் அருள் வாழ்விற்கான ஓர் இளந்தளிர்காலம். ஆன்மீக வசந்த காலமே இத்தவக்காலம். ஏன் இந்த தவக்காலம்? மடிந்துபோன மனித மாண்பினை மீண்டும் பெற்றுக்கொள்ளவதற்காக இயேசுவின் பாடுகளை நமதாக்கி இனிதே வாழ்வதற்காக, நம் மனக்காயங்களை உற்று நோக்கி நம் பாவங்களுக்காகவும், பிறருக்கு ஏற்படுத்திய மனக் காயங்களுக்காய் மனம் வருந்துவதற்காக மீட்பின் வரலாற்றை மானிட வாழ்வின் காவியமாக்குவதற்காக இத்தவக்காலம் வேண்டும்.

சேற்றில் விழுந்துவிட்டவன் மீண்டும் எழுந்து, குளித்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதில்லையா? ஆம், இந்தத் தவக்காலம் அதற்காகத் தான் நமக்கு அழைப்பு விடுக்கிறது. தூய்மைப்பெற நாம் மாறவேண்டும். நம்முடைய போலி வாழ்விலிருந்து மாயை உலகிலிருந்து சுயநல போக்கிலிருந்து நான் என்ற அகந்தையிலிருந்து கண்டிப்பாக மாறவேண்டும். அன்று மதலேன் மரியாள், சக்கேயு, கல்வாரியில் கள்வன், தாவீது அரசன், பேதுரு என பலர் மனம் வருந்தினர். மனம் மாறினர்.

கடவுள் நம் தந்தை, இரக்கமுள்ள தந்தை. நம்மை மன்னிக்கும் தந்தை, நம் குற்றங்களிலிருந்து விடுபட்டு ஊதாரி மகனைப்போல மனம்மாறி, அவரிடம் திரும்பி வர நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். வாய்ப்புகளையும், நேரங்களையும் கொடுத்துக்கொண்டிருக்கிறார். அதைப் பயன்படுத்தி நாம் குற்றமற்றர்வகளாய் மனந்திருந்தி வாழ வேண்டும். அதற்காகத்தான் தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்துவ விசுவாசத்தின் மையப்பொருட்களான கிறிஸ்து இறந்தார், உயிர்த்தார் என்பதை தியானிக்க, உயிர்ப்பு விழாவைக் கொண்டாட செபம், தவம், தியானம், தானம் வழியாக நம்மைத் தயாரிக்கும் தவக்காலம் எப்படி வந்தது? இந்த தவக்காலம் பற்றிய புரிதலை பழைய ஏற்பாட்டில் எக்காளம் ஊதும் பண்டிகையும் பாவ விடுதலைப் பண்டிகையும் தெளிவாக விளக்குகிறது.

ஆண்டவர் மோசேயிடம் கூறியது, இஸ்ராயேல் மக்களிடம் கூறு, ஏழாம் மாதம் முதல் நாள் உங்களுக்கு ஓய்வுநாள், அதைத் திருப்பேரவையைக் கூட்டி எக்காளம் ஊதி கொண்டாடுங்கள் (லேவி 23:23-24). ஏழாம் மாதம் பத்தாம் நாள் எக்காள ஒலி முழங்கட்டும். பாவக் கழுவாய் நிறைவேற்றும் அந்த நாளில் உங்கள் நாடெங்கும் எக்காளம் முழங்கச் செய்யுங்கள் (லேவி 25:9). மக்களுடைய வன்செயல்களையும், பாவத்தையும் எக்காளம்போல் குரலை உயர்த்தி தெரிவி என எசாயா கூறுகிறார் (எசா 58:1). "சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள். தூய்மையான உண்ணாநோன்புக்கென நாள் குறியுங்கள். வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள்" என்று யோவேல் இறைவாக்கினர் கூறுகிறார் (யோவே 2: 15).

யூதர்கள் இந்த எக்காளச் சத்தத்தை இறைவனின் குரலாக உணர்ந்து மகிழ்ந்தார்கள். இந்தச் சத்தம் மூன்று வகையான நோக்கங்களைக் கொண்டது, முதலாவது, மனந்திரும்புதலின் அழைப்பாக, அதாவது பாவத்தின் காரணமாக அழிந்துபோகிறவர்கள் அழியாமையைப் பெற்று மீண்டும் வாழவும், மனந்திரும்பி வாழ்வு பெறவும் ஊதப்பட்டது. இரண்டாம் எக்காளச் சத்தம் இறைவன் தம் மக்களாம் இஸ்ரயேலிடம் கொண்ட உறவின் உடன்படிக்கையை நினைவுப்படுத்தும் நோக்கமாக இருந்தது. மூன்றாவது எக்காள ஓசை, இஸ்ராயேல் மக்கள் தங்கள் குற்றங்களை இறைவன் முன் கொணர்வதற்காக ஊதப்பட்டது.

இருள் பாவத்திற்கு அடையாளமாகும். இருளை பாவ இருள் என்று சொல்வார்கள். "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்" (எசா 9:2) என்று எசாயா கூறியுள்ளார். "இயேசுவிடம் வாழ்வு இருந்தது, அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது, அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன்மேல் வெற்றிக்கொள்ளவில்லை" (யோவா 1:4-5) என யோவான் கூறுகிறார். எக்காளம் ஊதும் பண்டிகை இருளில், பாவத்தில் வாழுகிறவர்கள் மனந்திரும்பி ஒன்றுபடும் திருநாள்.

திரிசி மாதம் ஒன்பதாம் நாள் மாலை தொடங்கி பத்தாம் நாள் மாலை வரை கொண்டாடும் ஒருநாள் அதாவது 24மணி நேரப் பண்டிகையாகும். பாவம் மன்னிக்கப்படுவது மட்டுமன்றி பாவத்திலிருந்தே விடுதலைப்பெறும் ஒரு முக்கியப் பண்டிகையாகும்.

"ஏழாம் மாதம் பத்தாம் நாள், குடிமக்களும், உங்களோடு வாழும் அன்னியரும் வேலை ஒன்றும் செய்யாமல் நோன்பிருக்க வேண்டும், இது உங்களுக்கு என்றும் உள்ள நியமம் ஆகும். அந்நாளில் நீங்கள் தூய்மையாக்கும்படி, உங்களுக்கென பாவக் கழுவாய் நிறைவேற்றப்படும். ஆண்டவர் திருமுன் உங்கள் பாவங்களுக்காய் கழுவாய் நீக்கப்பட்டு நீங்கள் தூய்மையடைவீர்கள். அது உங்களுக்கு நோன்பு நாள் இது என்றுமுள நோன்பு நாள் ஆகும்" (லேவி. 16: 29-31). இந்தப் பாவ விடுதலைத் தேடும் நாள் ஒரு பயபக்தியான நோன்பு நாளாகும். பாவ விடுதலைப் பெறும் சிறப்பான நாளாகும். நாம் இன்று நடைமுறைப்படுத்தி வரும் தவக்கால முயற்சிகள் இந்தப்பண்டிகைகளின் வழிமுறையே. இந்தத் தவக்காலம் புதிய ஏற்பாட்டில் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

மாற்றங்கள் என்றும் மாறாதது. தவக்கால நோன்பு நாட்களும் மாற்றத்திற்குள்ளானது. தூய இரணேயுஸ் திருத்தந்தை விக்டருக்கு கி.பி. 203ம் ஆண்டு எழுதிய மடலில் கிழக்கத்திய, மேற்கத்திய திருச்சபையின் வழக்கத்திலிருந்த வேறுபாடுகளாம் ஒருநாள் இரண்டுநாள் தவக்காலத்தைப் பற்றி எழுதி அதில் மாற்றம் கொணர அறிவுறுத்தினார். தூயஅத்தனாசியார் கி.பி. 373 தவக்கால மடலில், புனித வாரத்திற்கு முன்னால் 40 நாட்கள் நோன்பிருக்க வேண்டுமென்று மக்களிடம் கேட்டுக் கொண்டார். தூய சிரில் அலெக்சாண்டிரியா கி.பி. 444லும் திருத்தந்தை லியோ கி.பி. 461லும் தவக்காலத்தில் கண்டிப்பாக 40 நாட்கள் நோன்பிருக்க வேண்டுமென்பதனை வலியுறுத்துகிறார்கள். 4ம் நூற்றாண்டிலிருந்து 40 நாட்கள் வழக்கத்திற்கு வந்தது.

எருசலேமில் 8வார நோன்பு வழக்கமாக இருந்தது. சனி, ஞாயிறு ஆகிய நாட்கள் நீங்கலாக 40 நாட்கள். ரோமிலும் 6 வார நோன்பு வழக்கத்திலிருந்தது. அதில் ஞாயிற்றுக்கிழமை நோன்பு நீங்கலாக 36 நாட்கள் நோன்பு என இருந்தது. இந்த நோன்பு நாட்களை 40 நாட்களுக்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ள விபூதிபுதன் புகுத்தப்பட்டு 40 நாட்கள் என வழக்கமாக்கப்பட்டது. இந்த 40 நாட்கள் நோன்பு என்பது எப்படி நிர்ணயிக்கப்பட்டது, மோசேயும் எலியாவும் 40இரவும் பகலும் நோன்பு மேற்கொண்டனர் (விப. 34:28, 1அர.19:8). பெரிய வெள்ளி 40 நாட்கள் நீடித்தது (தொ.நூ.7:4). மோசே சீனாய் மலையில் 40 நாட்கள் நோன்பிருந்து தவமிருந்து வேண்டல் செய்து சாத்தானின் தொல்லைகளை வென்ற நாட்களையும் குறிக்கிறது.

ஆம். இத்தவக்காலம் 40 நாட்கள் திருச்சபையின் கருவிகளாம் செபம், தவம், தருமம் தியானம்... தவறாது பயன்படுத்துவோம். நமது படைப்பு, நமது வீழ்ச்சி, இயேசுவில் நமக்குக் கிடைத்த மீட்பு இவற்றைப் பற்றி தியானிப்போம். நம் ஆண்டவர் தூயவர் நாமும் தூயவராய் வாழ அவரில் அழைக்கப்பட்டுள்ளோம். பசித்தவருக்கு உணவு கொடுப்போம், களைத்த மனத்தை உற்சாகப்படுத்துவோம். கலங்கிய மனத்தை கனிவோடு பார்ப்போம், கல்லாதவனுக்குக் கற்பிப்போம், உடைந்த இதயத்திற்கு அன்பைப் பகிர்வோம். துயரப்படுவோர்க்கு ஆறுதல் கூறுவோம். இல்லாதவர்மேல் இரக்கம் கொள்வோம். பகைவர்களையும் மன்னிப்போம். சிலுவை மரத்தின் கனிவை சிந்தனைக்கு இதமாக்கி, அடிமை விலங்கொடித்து, ஆண்டவர் பாதம் சரணடைந்து அர்த்தமுள்ள ஆன்மீக வாழ்வு வாழ்வோம்.

## தவக்காலம் அருளின் காலம்

திரு. P. விக்டர்

இறை இயேசுவின் அன்புக்குரியவர்களே, இறைவனின் எல்லா ஆசியும், வளமும், நலமும் பெற்று மகிழ்வீர்களாக, தவக்காலம் "அருளின் காலம்தான்" மாற்றுக்கருத்து இருக்க முடியாது. இது குறித்து ஒரு நண்பனிடம் உரையாடிக்கொண்டு இருந்தபொழுது, "தவக்காலம் அருளின் காலம்" அதுசரிதான், அப்படியானால் மற்ற காலங்கள் "இருளின் காலமா?" என்று வினவினார் ஒரு நகைச்சுவைக்காக. அவர் அப்படி கேட்டிருந்தாலும், அவர் கேட்ட இந்த வார்த்தைகள் என்னை சிந்திக்க வைத்தன. ஆண்டு முழுவதும் ஆண்டவரது அருள் நம்மோடு இருப்பது நாம் அறிந்த ஒன்றுதானே. ஏனெனில் அவர் காலங்களைக் கடந்தவர். அதுமட்டுமல்ல, "மலைகள் அகன்றாலும், குன்றுகள் நிலை மாறினாலும் என் அருள் உன்னைவிட்டு விலகாது" (எசா 54:10) என்று வாக்களித்தவர் அல்லவா நம் கடவுள். எனவே அவரது அருள் நம்மைவிட்டு எப்பொழுதும் விலகாது என்பதில் நாம் உறுதியாய் இருக்கலாம். அப்படியானால் "தவக்காலம்-அருளின் காலம்" என்பதை எப்படி புரிந்துக்கொள்வது. தூய ஆவியானவர் இது குறித்த விளக்கத்தை நமக்குத் தருவாராக.

நாம் வாழும் இவ்வுலகில் நமது அன்றாட வாழ்வில் பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுத்து வருகின்றோம். எந்த நிகழ்விலும் நாம் ஏனோதானோவென்று பங்கெடுப்பதில்லை. ஒவ்வொரு விழாவிற்கும் ஏற்ப முன்தயாரிப்போடு அங்கு செல்வது நமது பழக்கமும் வழக்கமுமாகும். ஒரு திருமணத்திற்குச் செல்லவேண்டுமானால் அதற்கேற்ப ஆடம்பர உடையணிந்து, நல்ல அலங்காரத்தோடு செல்கின்றோம். ஒரு பிறந்த நாள் விழா, புதுநன்மை விழா, காதணி விழா, திருமுழுக்கு விழா இப்படி எந்த விழாவானாலும் அவை ஒவ்வொன்றிற்கும் ஏற்ப தகுந்த அலங்காரத்தோடும்,

ஆயத்தத்தோடும், முன் தயாரிப்போடும் செல்வது நாம் அறிந்ததுதானே. அதுபோல துக்க நிகழ்வுகளிலும் அதற்கேற்றவிதத்தில் ஆடம்பரமின்றி செல்வது நமது பழக்கமாகும். உலகப்பிரகாரமான விழாக்களுக்கே இப்படி ஒரு முன்தயாரிப்போடு நாம் செல்வோமென்றால் விழாக்களில் முதன்மையானதாகக் கொண்டாடப்படும் "பாஸ்கா" விழாவினை கொண்டாட எவ்வளவு முன் தயாரிப்பு அவசியம்?

எனவே தான் திருச்சபையானது ஒவ்வொரு விழாவைக் கொண்டாடும் முன்பு அதற்கேற்ற ஆயத்தம் செய்வதற்கு முன் தயாரிப்புகளை மேற்கொள்வதற்கு நமக்கு அழைப்பு விடுக்கிறது. தகுந்த முன் தயாரிப்பின்றி மணமகனை வரவேற்கச் சென்றிருந்த ஐந்து அறிவில்லாத கன்னியர்கள் என்ன ஆனார்கள் என்பது நாம் அறிந்தது தானே (மத் 25:12). விழாவிற்குத்தான் சென்றார்கள், ஆர்வத்தோடுதான் சென்றார்கள், ஆடம்பரத்தோடும் சென்றாார்கள். ஆனால் தகுந்த ஆயத்தமின்றி எண்ணெய் எடுத்துச்செல்ல மறந்தார்கள், புறம்பே தள்ளப்பட்டார்கள். எனவே விழிப்பாயிருங்கள், ஏனெனில் ஆண்டவர் வரும் நாளோ, வேளையோ உங்களுக்குத் தெரியாது (மத். 25:13). அதனால்தான் இந்த ஆயத்தப்பணியைச் செய்ய திருச்சபை தவக்காலத்தை நமக்கு வழங்கி உதவுகின்றது.

எதற்காக இந்த "அருளின் காலம்" அல்லது "ஆயத்தக் காலம்" நாம் கொண்டாட இருக்கும் பாஸ்கா விழாவைக்குறித்த "புரிதல்" நமக்குள் உண்டாக வேண்டும். அப்பொழுதுதான் தகுந்த ஈடுபாட்டுடன் அவ்விழாவில் பங்கெடுக்க இயலும். அதற்காக இந்த முன் தயாரிப்புகள் அவசியம். இந்த அருளின் காலத்தில் பாஸ்கா விழாகுறித்த புரிதல் மாத்திரமல்ல, விழாகுறித்த ஆர்வத்தையும், நம்மைக்குறித்து ஆண்டவரின் எதிர்ப்பார்ப்பையும் நமக்குள் உண்டாக்குகிறது. இந்த புரிதலும், ஆர்வமும், எதிர்ப்பார்ப்பும் ஒன்று சேர அவ்விழாவில் நாம் பங்கெடுக்கும்பொழுது அது நமது நம்பிக்கையை, விசுவாசத்தை பெருகச் செய்கிறது. இந்த நம்பிக்கையும், விசுவாசமும் நம்மில் பெருகுகிறபொழுது, நாம் ஆண்டவருக்குப் பிரியமானவர்களாக, அவருக்கு ஏற்ற சாட்சிகளாக வாழ்வதற்கு நம்மைத் தூண்டுகிறது.

ஆயத்தம் அல்லது முன் தயாரிப்பு என்றாலே பல மாற்றங்களை உள்ளடக்கியது என்பது பொருள். அது வெளி அலங்காரத்திற்கு மட்டுமல்ல, நமது ஆன்மீக வாழ்விலும் பெரும் மாற்றங்களை இந்த ஆயத்த நிலை அல்லது முன்தயாரிப்பு நிலை நமக்குள் உண்டாக்குகிறது. சாதாரணமாக இருந்த நம்மை தூண்டிவிட்டு, உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி சக்திக்கொடுத்து கிறிஸ்துவுக்கு ஏற்ற சாட்சிகளாக வாழ வகை செய்கிறதினாலேயே இந்த ஆயத்த காலத்தை "தவக்காலம்" அல்லது "அருளின் காலம்" என்று அழைக்கலாம். ஆண்டவரின் அருளுக்காக எதிர் நோக்கியுள்ள காலம் என்றும் கூறலாம்.

அருள் என்றால் இரக்கம், கிருபை, தயவு இப்படி எந்த வார்த்தையினால் வேண்டுமானாலும் அழைக்கலாம். கடவுளிடமிருந்து எதையும் பெறுவதற்கு தகுதியில்லாத ஒருவருக்கு ஆண்டவர் மனமுவந்து தனது கொடைகளைத் தரும் செயலுக்குப் பெயர்தான் "அருள்" அல்லது "இரக்கம்" அல்லது "கிருபை" என்பதாகும். நாம் பாவிகளாய் இருந்தபொழுதே கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தமது அன்பை வெளிப்படுத்தினார் (உரோ 5:8). இதைத்தான் அருள் என்கிறோம். சோதோம், சொமோரா பட்டணங்களை அழித்த கடவுள் அங்கிருந்த "லோத்து" குடும்பத்தின்மீது மட்டும் "அருள் கூர்ந்ததினால் தனது நண்பர் ஆபிரகாமின் சகோதரர் மகன் என்பதினால் ஆண்டவரின் அருள் அவருக்குக் கிட்டியது.

சாத்ராக்கு, மேசாக்கு, ஆபெத்நெகோ இந்த மூன்று யூத வாலிபர்களும் ஆண்டவரின் பார்வையில் உண்மையுள்ளவர்களாக, குற்றம் கண்டுபிடிக்க இயலாதவர்களாக, மரணமே வந்தாலும் ஆண்டவரை மட்டுமே ஆராதிக்கிறவர்களாய் இருந்ததினால் அவர்கள் நெருப்புச் சூளையில் போடப்பட்டபொழுது ஆண்டவர் அவர்கள்மேல் "அருள்" கூர்ந்தார். தமது தூதரை அனுப்பி நெருப்பினால் வெந்து அழியாதபடி அவர்களைக் காப்பாற்றினார் (தானி. 3:4). "அருள் மிகப்பெற்றவளே வாழ்க" (லூக். 1:26). ஆண்டவரின் அருளை பெறுவதற்கு அன்னை மரியாள் எந்தவொரு பெரிய காரியங்களையும் செய்ததாக திருவிவிலியத்தில் கூறப்படவில்லை. ஆனால், அவரது வாழ்வு ஆண்டவரே பாராட்டுகிற அளவுக்கு இருந்தது. அதனால் ஆண்டவரின் அருளையடைந்தார். இறைமகனின் தாயானார்.

இப்படி இவர்களைப்போன்று நாம் சாதாரணமானவர்களாய் இருந்தாலும் செய்கின்ற பணிகளை உண்மையோடும், பக்தியோடும், நீதிநேர்மையோடும் ஆண்டவரின்மீது கொண்டுள்ள அன்பனிமித்தம் அவருக்குப் பயந்து செய்யும்பொழுது அவரது அருள் நமக்குக் கிட்டும். இதுதான் மேலே கூறப்பட்டவர்கள் நமக்குக் கற்றுத்தரும் பாடமாகும். இவ்வாறு ஆண்டவரின் அருளைப் பெற்று மகிழ்வுடன் வாழ்வதற்கு வழிசொல்வதுதான் தவக்காலம்-அருளின் காலம். நமது பழக்கத்தின் காரணமாக இத்தவக்காலத்தில் இயல்பாகவே ஆன்மீக செயல்களில் ஈடுபாட்டுடன் இருப்பது வழக்கம். உதாரணமாக, ஆண்களில் பெரும்பாலோர் மது அருந்துவதை, புகை பிடித்தலை விட்டுவிடுங்கள். பலர் அசைவ உணவுவகைகளை உண்ணுவதில்லை. உண்ணா நோன்பு இருப்பர். இக்காலங்களில் பலர் திருப்பயணங்களை மேற்கொள்கின்றனர்.

ஒருசிலர் தவநாட்களில் அனுதினம் திருப்பலியில் பங்கெடுப்பர். தவக்காலம் என்றாலே இவைப்பற்றியெல்லாம் யாரும் சொல்லாமலேயே சிந்திக்க ஆரம்பித்துவிடுவர். ஆனால் உண்மையான மனமாற்றம்

என்பது நமது ஆன்மீக வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள்தான். இத்தகைய ஆன்மீக மாற்றங்கள் நாம் கேட்கும் தியான அருளுரைகள் மூலமாகவும், ஆண்டவருக்குப் பிரியமில்லாத செயல்களை பழக்க வழக்கங்களை விட்டுவிடுவதன் மூலமாகவும், ஆண்டவர் விடுக்கும் செயல்களைச் செய்வதாக வாக்களிப்பதன் வாயிலாகவும் நமக்குள் உண்டாகும். இத்தகைய மாற்றங்களைத்தான் ஆண்டவரும் விரும்புகின்றார். இத்தகைய செயல்களால் ஆண்டவரின் "அருள்" நம்மீது ஊற்றப்படுகின்றது. இப்படி ஆண்டவரின் "அருளைப் பெற்றுக்கொள்ள அதிக வாய்ப்புகளை இத்தவக்காலம் நமக்கு வழங்குவதால் இக்காலத்தை "அருளின் காலம்" என்று தாராளமாக அழைக்கலாம்.

ஆண்டவரின் அருள் நம்மீது ஊற்றப்படும்பொழுது நமக்குள் கீழ்க்கண்ட மாற்றங்கள் உண்டாகிறது. இவை நம்மில் நிகழ்ந்துள்ளதா? சோதித்துப் பார்ப்போம். மிகுந்த மன மகிழ்ச்சியை நமக்குள் உண்டாக்குகிறது. இந்த இரட்சிப்பின் மனமகிழ்ச்சி நம்மோடு நின்று விடுவதில்லை நம்மூலம் மற்றவர்களுக்கும் பரவுகிறது. கடவுளுக்கு உகந்த செயல்களைச் செய்து வாழ்வதற்கு நம்மைத் தூண்டுகிறது. அதே வேளையில் கடவுள் விரும்பாத செயல்களைச் செய்யக்கூடாது தடுக்கிறது. பாவத்தை வெறுக்க வைக்கிறது. ஆண்டவரது திருவசனங்களை, இறைவார்த்தைகளை விருப்பத்துடன் வாசிக்க நம்மைத் தூண்டுகிறது. புதிய சிந்தனைகளைத் தந்து அதில் ஆர்வம் கொள்ள வைக்கிறது.

பரிசுத்த ஆவியின் வல்லமை நம்மீது ஊற்றப்படுவதை அறிய முடிகிறது. அது நம்மை பெலப்படுத்தி ஆண்டவருக்கு ஏற்ற சாட்சியாக வாழ நம்மைத்தூண்டுகிறது. துன்பமே வந்தாலும் துவளாத மன உறுதியைத் தருகிறது. ஆத்தும பாசத்தை நமக்குள் உண்டாக்குகிறது. அதனிமித்தம் நற்செய்தி அறிவிப்பு பணிக்கு நம்மை வழிநடத்துகிறது. நம்மைப்போல் பிறரையும் நேசிக்கிற மனப்பக்குவம் வந்தடைகிறது. சண்டைச் சச்சரவற்ற சமாதான வாழ்வு வாழ வழிச்செய்கிறது. இயேசுவின் நற்செய்தி எங்கும் பரவ உழைப்பதற்கு உந்து சக்திக்கிடைக்கிறது. இத்தகைய மாற்றங்கள் நமக்குள் இருந்தால், நாம் நிச்சயமாக ஆண்டவரின் "அருளை" அடைந்துள்ளோம் என்று கூறிக்கொள்ளலாம். மாற்றங்கள் ஒன்றே மாறாதது." "மனம் மாறுவோம் நற்செய்தியை நம்புவோம்" பெற்றுக்கொண்ட ஆண்டவரின் "அருளை" அனைவருக்கும் பகிர்ந்தளிப்போம்.

# தூய பீட்டர் தமியானின் வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

இரண்டாயிரமாவது நூற்றாண்டின் துவக்க காலத்தில் வாழ்ந்து திருச்சபையின் தூய்மையைக் கட்டிக்காக்க தனது வாழ்வை அர்ப்பணித்த, பெனடிக்டியன் ஆசீர்வாதப்பர் துறவியான தூய பீட்டர் தமியானை கத்தோலிக்க திருச்சபையானது பிப்ரவரி 21ம் நாள் திருவிழாவாக கொண்டாடி மகிழ்கிறது. இவர் 11ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த பிரபலங்களில் ஒருவர் எனவும், திருச்சபையில் இருந்துகொண்டு அதனை வேறோடு அறுக்க உலாவிக்கிடக்கும் கரையான்களை இனங்கண்டு, திருச்சபையின் தூய்மைகெடாமல் அவற்றை நல்வழிப்படுத்திட என்றுமே தயங்காத, நெஞ்சுறுதி கொண்டு போராடியவர் தான் பீட்டர் தமியான் என்று நம் முன்னாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர், 2009ம் ஆண்டு தனது வழக்கமான பொது மக்களின் சந்திப்பு உரையில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இத்தாலியில் ரவென்னாவில் பிறந்த பீட்டரின் குடும்பம் மிகப் பெரியது. பெற்றோர்களும் உடன்பிறந்த ஒரு அண்ணனும் இவரை வெறுத்து ஒதுக்கினார்கள். சிறு வயதிலேயே அனாதையாக விடப்பட்டார். ஆனால் மற்றொரு அண்ணன் இவரை வளர்ப்பதாக சொல்லி பன்றி மேய்க்க அனுப்பினான். கடவுள் பக்தியும் அறிவும் மிகுந்த பீட்டர் அன்பும் வாய்ப்புகளும் இல்லாமல் பரிதவித்தார். அந்நேரம் குருவாக இருந்த தமியான் என்ற மற்றொரு அண்ணன், பீட்டர் மீது பரிவு கொண்டு படிக்க வைத்தார். இருளில் நின்ற தனக்கு ஒளியேற்றிய இந்த அண்ணனின் பெயரையே பீட்டர் தமது பெயருடன் சேர்த்துக் கொண்டார். தனது 25ம் வயதிலேயே சிறந்த பேராசிரியராக கண்டறியப்பட்டார்.

உலக நாட்டங்களில் வெறுப்படைந்து துறவியாக விரும்பினார். பயிற்சி காலங்களில் அதிகமாக ஒறுத்தல்கள் செய்ததால் உடல்நிலைப் பாதிக்கப்பட்டார். இறைவனின் துணையுடன் திருநூலைத் தெளிவாகக் கற்றுத் தேர்ந்தார். தமது துறவிகளுக்கும் பிறகு மற்ற சபை துறவிகளுக்கும் திருவிவிலியம் சார்ந்த வகுப்புகளை எடுத்தார். 1043ம் ஆண்டு தனது சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். சபையின் தலைவராக இருந்தபோது விதிமுறைகளை ஒழுங்குபடுத்தினார். மற்ற இடங்களிலும் துறவு மடங்களை விரிவுப்படுத்தினார். ஒப்புரவு அருள்சாதனத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தார். நான்காம் கிரகோரி திருத்தந்தையாக பொறுப்பேற்றதும் இத்தாலி ஆலயங்களில் நடைபெறும் கிறிஸ்தவத்திற்கு ஒவ்வாத சில காரியங்களைச் சரிசெய்யுமாறு கடிதம் எழுதினார்.

மேலும் 1047ல் நடந்த லாத்தரன் பொதுச்சங்கத்தில் கலந்துகொண்டு, பாவமன்னிப்பு பெற வேண்டுமென்றால் பணம் கொடுத்தால் போதும் என்ற

நிலைமையை வன்மையாக கண்டித்தார். அதை எதிர்த்தது மட்டுமல்ல அந்நடைமுறைக்கு முற்றுப்புள்ளியும் வைத்தவர் தூய பீட்டர் தமியான் என்பது குறிப்பிடத்தக்கது. இல்லையெனில் அந்த அருட்சாதனத்திற்கு உள்ள மகிமையை நாம் உணராமலேயே இருந்திருப்போம். காலப்போக்கில் 10ம் ஸ்டீபன் திருத்தந்தையாக பொறுப்பேற்றபோது, பீட்டர் தமியானை கர்தினால் ஆயராக்க விரும்பினார். இதனை முதலில் ஏற்க மறுத்த பீட்டர், திருச்சபையில் இருந்து விலக்கிவைக்கப்படுவீர்கள் என்று மிரட்டப்படவே, அதனை ஏற்றுக் கொண்டார். அதோடு தன்னை நிறுத்திக்கொள்ளாமல், பீட்டர், அனைத்து கர்தினால்களுக்கும் ஒரு கடிதம் எழுதினார். அதில் "எல்லோரும் தங்கள் முன்மாதிரிகையால் மற்றவர்கள் முன் ஒளிர வேண்டும்" என்று அழைப்பு விடுத்தார்.

திருத்தந்தையாக முதலாம் நிக்கோலாஸ் இருந்த சமயம், மிலான் நகரில் பாவ மன்னிப்பிற்கு பணம் பெறும் குருக்கள் ஒரு கூட்டணி, மற்றவர்கள் வேறு கூட்டணி என இரண்டாக குருக்கள் அணிகள் உருவாகி மிகப் பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டது திருச்சபை. இதனை தீர்க்க பீட்டர் தமியானை திருத்தந்தை அங்கு அனுப்பினார். பணம் பெற்ற அணியினர், திருத்தந்தைக்கு எங்கள் மீது எந்த அதிகாரமும் இல்லை என்று சொல்லி வாதிட்டார்கள். தமது வாதத்திறமையால் அவர்களை தமியான் முறியடித்தார். அப்படி இருந்தும் அவர்கள் கடைசிவரை தங்களை மாற்றிக்கொள்ளவே இல்லை.

அந்நேரம் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்ட பேராயர் ஒருவரை ஆதரித்த ரவென்னா நகர மக்களைச் சந்தித்து திருச்சபையுடன் அவர்களை மீண்டும் கூட்டிச் சேர்க்க 1072 ஆம் ஆண்டு முதலே ரவென்னாவிற்கு தமியான் அனுப்பப்பட்டார். அங்கு போகிற வழியில் நோயுற்ற தமியான் பிப்ரவரி 21ம் நாள் இறையடிச் சேர்ந்தார். முறைப்படி புனிதர் என்று அறிவிக்கப்படாவிட்டாலும் இறப்பு முதலே இவரின் விழாவை நம்பிக்கையாளர்கள் கொண்டாடி வருகிறார்கள். 1823ல் திருத்தந்தை 12ம் சிங்கராயர் உலகம் முழுவதும் இவருடைய விழாவை நினைவு கூற அனுமதியளித்து, தூய பீட்டர் தமியானை திருச்சபையின் மறைவல்லுநர் என்றும் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

தூய பீட்டர் தமியான் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதி மட்டுமல்ல, அவர் இன்றைக்கு வாழ்ந்திருப்பாரானால், 2ம் வத்திகான் சங்கத்தின் சீர்திருத்தங்களை முன்னின்று எடுத்துரைத்து கடைசி கத்தோலிக்கர் வரை அதன் சிறப்பம்சங்களையும் சீர்முறைகளையும் ஊக்கப்படுத்தி வழிநடத்தியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அதுமட்டுமல்ல இன்றைக்கு பல்வேறு சபை துறவிகள் மத்தியில் காணப்படும் கூட்டு செபங்களின் முறைகளையும் அவர்களோடு பொதுநிலையினரும் இணைந்து செப

வாழ்விலும், தூய்மையின் பாதையிலும் இட்டுசெல்லும் எண்ணற்ற குருக்கள், துறவியர் சபைகளையும் அதன் செயல்பாடுகளையும் கண்டு பேரானந்தம் கொண்டிருப்பார். இதுவே, கத்தோலிக்கர்களாகிய நமக்கு இவரது வாழ்வு எடுத்துச்சொல்லும் பாடம் என்றால் அது மிகையாகாது.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச

செபிக்காத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது. மேய்ப்பரின் அதிகாரம் இறைவனுக்கும் மக்களுக்கும் நெருக்கமாக இருப்பதிலிருந்து வருகின்றது என்று திருப்பலியில் மறையுரையாற்றினார் திருத்தந்தை பிரான்சிஸ். அதிகாரம் கொண்டவர் போன்று இயேசு போதிப்பது பற்றிக்கூறும் இந்நாளைய மாற்கு நற்செய்தி வாசகத்தை (மாற்கு 1:21-28) மையப்படுத்தி மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உணர்வு, அருகாமை, சீரான வாழ்வு ஆகியவை மேய்ப்பர் மற்றும் அவரின் அதிகாரத்தின் மூன்று பண்புகள் என்று கூறினார். மேய்ப்பருக்கு அதிகாரத்தைக் கொடுப்பது அல்லது அதிகாரத்தை அவரில் தட்டியெழுப்புவது, செபத்தில் அவர் இறைவனுக்கு மிக நெருக்கமாக இருப்பதிலிருந்து வழங்கப்படுவதாகும் என்றும் கூறியத் திருத்தந்தை செபிக்காத மற்றும் இறைவனைத் தேடாத மேய்ப்பர் மக்களுக்கு நெருக்கமாக இருக்க இயலாது என்றுரைத்தார்.

ஆசியாவின் மிகவும் பரந்து விரிந்த கலாச்சார உலகில், திருஅவை ஏராளமான இடையூறுகளை எதிர்கொள்கின்றது மற்றும் திருஅவை சிறுபான்மையாக இருப்பதன் காரணத்தால், அதன் பணிகளும் மிகவும் கடினமாக உள்ளன என்று சனவரி மாதச் செபக்கருத்துப் பற்றிய காணொளிச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். தங்களின் மத நம்பிக்கைக்காகச் சித்ரவதைப்படுத்தப்படும் மக்களை நினைக்கையில், நம் வழிபாடுகள் மற்றும் மத நம்பிக்கைகளைக் கடந்து நாம் செல்கின்றோம் என்றும், தங்களின் மதத் தனித்துவத்தை மறுதலிக்காமல், அதனைக் காப்பதற்காகப் போராடும் மக்களின் பக்கம் நம்மை இருத்துவோம் என்றும் திருத்தந்தை அச்செய்தியில் தெரிவித்துள்ளார். ஆசியாவில் உள்ள கிறிஸ்தவர்களும், மற்ற சமயச் சிறுபான்மையினரும் தங்களது இறைநம்பிக்கையை முழுச் சுதந்திரத்துடன் கடைப்பிடிக்குமாறு செபிப்போம் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**திருக்குடும்ப திருநாள்-திருத்தந்தையின் உரை:** தங்கள் குழந்தை இறைவனுக்குரியவர் என்பதையும், தாங்கள் அக்குழந்தைக்கு உரிமையாளர்கள் அல்ல. மாறாக காவலர்கள் என்பதையும் உறுதியாக்க மரியாவும் யோசேப்பும் குழந்தையை கோவிலுக்கு எடுத்துச் சென்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர் இந்த உண்மையை உணர்வது,

பயனுள்ளதாக இருக்கும். கடவுளே அனைத்திற்கும் உகந்த வகையில் குழந்தைகள் வளர்வதற்கு ஏற்றதொரு சூழலை உருவாக்கித்தருவதே, குடும்பங்களின் தலையாயப் பணி. குடும்பத்தின் அரசியான மரியாவின் பரிந்துரையோடு, அனைத்து குடும்பங்களுக்காகவும் செபிப்போம். "அமைதியின் விதைகள் வளர்ந்து வரும் வேளையில், அவற்றைப் பேணிக்காத்து, நமது மாநகரங்களை அமைதியை உருவாக்கும் தொழிற்கூடங்களாக உருமாற்றுவோம்" என்ற சொற்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சனவரி மாதம் புத்தாண்டு நாளன்று சிறப்பிக்கப்பட்ட உலக அமைதி நாளுக்கென வழங்கிய செய்தியில் பதிவு செய்தார்.

இந்தியாவில், கத்தோலிக்கப் பள்ளிகளில் இந்துக் கடவுள்கள் வழிபாட்டைத் திணிக்க விரும்பும் அனைவரும், தேசபக்தர்கள் அல்ல, மாறாக, தேசபக்திக்கு எதிரானவர்கள் மற்றும் பயங்கரவாதி போன்றவர்கள் என்று, இந்திய ஆயர் பேரவையின் பொதுச் செயலர், ஆயர் தியோடர் மஸ்கரீனஸ் அவர்கள் கூறினார். இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தின் Vidishaவில் புனித மேரி கத்தோலிக்க கல்லூரிக்கு முன்பாக, அகில பாரத்ய வித்யார்த்தி பரிஷத் (ABVP) அமைப்பின் ஏறத்தாழ 900 உறுப்பினர்கள் கூடி, பாரத மாதாவுக்கு ஆரத்தி எடுப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். இந்நிகழ்வையொட்டி ஆசியச் செய்தியிடம் கருத்து தெரிவித்த, ஆயர் மஸ்கரீனஸ் அவர்கள் இந்த அமைப்பினரின் இந்நடவடிக்கை, இந்திய அரசியல் அமைப்புக்கு முரணானது, சனநாயகத்திற்கு எதிரானது மற்றும், தனிப்பட்டவரின் சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது என்று கூறினார்.

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## சுடர் வாசகர் போட்டி - 43 சரியான விடைகள்

1. தூய ஜான் நியூமேன்
2. பியட்ரோ வரியாரா, லிவியா புஸ்ஸா
3. கி.பி. 356ல் கொல்சீம் குன்றில்
4. தூய லூசியானா
5. அர்ஜென்டினாவில் பாஹியா பிலாங்கா என்னுமிடத்தில் உள்ள சகாய அன்னையின் புதல்வியர் சபை சிற்றாலயம்
6. கடவுளால் அணி செய்யப்பட்டவர்
7. புறங்கூறுதல்
8. ஜான் நியூமேன்
9. திருமுழுக்கு யோவான்
10. அருளாளர் அலோசியஸ் வரியாரா
11. தூய செபஸ்தியார்
12. தூய லவுரா விகூஞா
13. தூய பிரான்சிஸ்கு சலேசியார்
14. இறையன்புக்கு
15. அறுவடைத் திருநாள்

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

1. சகோ. மெல்கியூர், கோயம்புத்தூர்
2. பவுலின் சூசைநாதன், மதுராந்தகம்
3. ஜெயந்தி பெர்னான்டோ, சென்னை

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

தவக்காலம் மூன்றாம் ஞாயிறு
புனித பெர்பேத்துவா-பெலிசித்தா
புனித இறையோவான் துறவி
உரோம் நகர் புனித பிரான்சிஸ்கா
தவக்காலம் 4ம் ஞாயிறு
புனித பேட்ரிக்
தவக்காலம் 5ம் ஞாயிறு
புனித மரியாவின் கணவர் சூசையப்பர் பெருவிழா
குருத்து ஞாயிறு
பெரிய வியாழன்
பெரிய வெள்ளி - சிலுவைப்பாதை
உயிர்ப்பு ஞாயிறு திருப்பலி

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

யோசேப்பு வழிகாட்டும் நீதிமான்
தூய வாரம் நமக்கு தரும் பாடம்
தூய வெள்ளி - நம்மை தூய்மையாக்கும் வெள்ளி
திருச்சபை செய்திகள்


**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## சுடர் வாசகர் போட்டி - 44

1. தூய ஆகத்தா செபித்த செபம் என்ன?
2. திருநீற்று புதனன்று நெற்றியில் சாம்பல் பூசும்போது அருட்தந்தை கூறும் வார்த்தை என்ன?
3. சோதோம் கோமோரா நகரம் அழிந்தபோது எந்த குடும்பம் காப்பாற்றப்பட்டது?
4. நெருப்புச் சூளையிலிருந்து உயிருடன் காப்பாற்றப்பட்ட 3 இளைஞர்கள் யார்?
5. மேய்ப்பர் மற்றும் அவரின் அதிகாரத்தின் 3 பண்புகள் யாவை?
6. மத்திய பிரதேச மாநிலத்தின் புனித மேரி கத்தோலிக்க கல்லூரிக்கு முன்பாக போராட்டம் நடத்தும் அமைப்பின் பெயர் என்ன?
7. காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். இந்த இறைவார்த்தை திருவிவிலியத்தில் எங்குள்ளது?
8. நம்மை இறையழைத்தலுக்கு எதன் வழியாக இறைவன் அழைப்பதாக ஆசிரியர் கூறுகிறார்?
9. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உலக அமைதி நாளுக்கென வழங்கிய செய்தியில் அமைதியைப்பற்றி கூறிய வார்த்தை என்ன?
10. பாவமன்னிப்பு பெற பணம் கொடுத்தால் போதும் என்ற நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் யார்?
11. தவக்காலத்தில் 40 நாட்கள் நோன்பு இருக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்ட புனிதர் யார்?
12. "உன் பெயர் பேதுரு, இந்த பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" இந்த இறைவார்த்தை திருவிவிலியத்தில் எங்குள்ளது?
13. முள் ஒட்டியானம் அணிந்து உறங்கி தனது ஒருத்தலை செய்த புனிதர் யார்?
14. ஸ்பெயின் நாட்டில் கோன்டால் பினோ கிராமத்தில் பிறந்த அருளாளர் யார்?
15. குயிந்தானூஸ் எந்த புனிதரின் வாழ்க்கையில் தவறிழைக்க துணிந்தான்?

## பிப்ரவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வி | | 1அர. 2:1-4,10-12 | மாற்கு 6: 7-13 |
| 2 | வெ | ஆண்டவர் காணிக்கையாக ஒப்புக் கொடுக்கப்பட்ட விழா | I. மலா. 3:1-4<br>II. எபி. 2:14-18 | லூக். 2: 22-40 |
| 3 | ச | புனித ப்ளேஸ் ஆயர் | 1அர. 3:4-13 | மாற்கு 6: 30-34 |
| 4 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 5ஆம் ஞாயிறு | I. யோபு 7:1-4,6-7<br>II. 1கொரி. 9:16-19,22-23 | மாற்கு 1: 29-39 |
| 5 | தி | தூய ஆகத்தா | 1அர. 8:1-7,9-13 | மாற்கு 6: 53-56 |
| 6 | செ | தூய கொன்சாலோ கார்சியா மற்றும் புனித பால் மிக்கி | 1அர. 8:22-23,27-30 | மாற்கு 7: 1-13 |
| 7 | பு | அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் | 1அர. 10:1-10 | மாற்கு 7: 14-23 |
| 8 | வி | புனித எமிலியானி, புனித ஜோஸ்பின் பக்கித்தா | 1அர. 11:4-13 | மாற்கு 7: 24-30 |
| 9 | வெ | | 1அர. 11:29-32,12:19 | மாற்கு 7: 31-37 |
| 10 | ச | புனித கொலாஸ்திக்கா | 1அர. 12:26-32,13:33-34 | மாற்கு 8: 1-10 |
| 11 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 6ஆம் ஞாயிறு | I. லேவி. 60:1-6<br>II. 1கொரி.10:31-11:1 | மாற்கு 1: 40-45 |
| 12 | தி | | யாக். 1:1-11 | மாற்கு 8: 11-13 |
| 13 | செ | | யாக். 1:12-18 | மாற்கு 8: 14-21 |
| 14 | பு | **விபூதி புதன்: தவக்காலம் தொடக்கம்** | I. யோவே. 2:12-18<br>II. 2கொரி. 5:20-6:2 | மத் 6: 1-6,16-18 |
| 15 | வி | | இச. 30:15-20 | லூக். 9: 22-25 |
| 16 | வெ | | எசா. 58:1-9அ | மத். 9: 14-15 |
| 17 | ச | | எசா. 58:9ஆ-14 | லூக். 5: 27-32 |
| 18 | ஞா | தவக்காலம் முதல் ஞாயிறு | I. தொ.நூ. 9:8-15<br>II. 1பேது 3: 18-22 | மாற்கு 1: 12-15 |
| 19 | தி | | லேவி. 19: -2, 11-18 | மத். 25: 31-46 |
| 20 | செ | | எசா. 55:10-11 | மத். 6: 7-15 |
| 21 | பு | புனித பீட்டர் தமியான் | யோனா 3:1-10 | லூக். 11: 29-32 |
| 22 | வி | திருதூதர் பேதுருவின் தலைமைப் பீடம் விழா | 1பேது 5:1-4 | மத். 16: 13-19 |
| 23 | வெ | புனித போலிக்கார்ப்பு | எசே. 18:21-28 | மத். 5: 20-26 |
| 24 | ச | | இச. 26:16-19 | மத். 5: 43-48 |
| 25 | ஞா | தவக்காலம் இரண்டாம் ஞாயிறு | I. தொ.நூ. 22:1-2,9-13,15-18<br>II. உரோ. 8:31ஆ-34 | மாற்கு 9: 2-10 |
| 26 | தி | | தானி. 9:4ஆ-11அ | லூக். 6: 36-38 |
| 27 | செ | | எசா. 1:10,16-20 | மத். 23: 1-12 |
| 28 | பு | | எரே. 18:18-20 | மத். 20: 17-28 |